திருக்கனங்கூரில் கால்வாய் மீது சிறு அணை

*322 வினா—திரு. ந. நாச்சியப்பன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் உள்ள திருக்கனங்கூர் கிராமத்திலுள்ள ஏரியின் வாய்க்காலுக்கு சிறிய அணை கட்ட வேண்டும் என்று அந்த கிராம மக்கள் அரசாங்கத்தை கோரியுள்ளார்களா?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

மேம்பாலங்கள்.

*323 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலியில் புதியதாகக் கட்டப்பட்டு வரும் மேம்பாலத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(இ) இதற்கு நகரசபை ஏதேனும் பங்குத் தொகை கொடுத்துள்ளதா?

(உ) ஆம் எனில், எவ்வளவு?

(எ) இந்த வேலை எப்போது முடிவடையும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) 1971-72-ல் ரூ. 5.00 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

(இ) & (உ) செலவில் 25 சதவிகிதம் நகராட்சி ஏற்றுக் கொள்ளவேண்டும். ஆனால் நிதி பற்றாக்குறையினால், அதை ஏற்க இயலாது என்று அது தெரிவித்திருக்கிறது. அரசினிடம் கடனைக் கோருமாறு தலைமைப் பொறியாளர் நகராட்சியினைக் கேட்டிருக்கிறார்.

(எ) இந்த வேலை 1972-ம் வருட இறுதிக்குள் முடிவடையும்